# நமது தின கனி


காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol : 01 | Issue : 44 | 4 Pages | 14.09.2023 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர் : 01 | இதழ் : 44 | 4 பக்கங்கள் | 14.09.2023 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட முடியாது: கர்நாடக முதல்வர் திட்டவட்டம்



டெல்லி, செப். 14

காவிரியில் இருந்து தமிழகத்துக்கு 15 நாட்களுக்கு வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துவிட உத்தரவிட வேண்டும் என்று காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு காவிரி ஒழுங்காற்றுக்குழு பரிந்துரை செய்துள்ளது. ஆனால் இன்று தமிழகத்துக்கு காவிரியில் இருந்து 5ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்படவில்லை. தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க உத்தரவிட்டதற்கு கர்நாடக விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் இந்த விவகாரம் தொடர்பாக அனைத்து கட்சி கூட்டத்திற்கு அம்மாநில முதலமைச்சர் சித்தராமையா அழைப்பு விடுத்திருக்கிறார். இந்த விவகாரம் தொடர்பாக அவர் கூறியதாவது, "மாநிலத்தில் போதுமான மழை பெய்யாத காரணத்தால், உச்சநீதிமன்ற உத்தரவின் படி தமிழ் நாட்டிற்கு தண்ணீர் திறக்கும் நிலையில் நாங்கள் இல்லை. பாராளுமன்ற சிறப்பு கூட்டம் துவங்கும் முன்பு, இந்த விவகாரம் தொடர்பாக எங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி திட்டமிட்டு வருகிறோம்," என்று கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா தெரிவித்து உள்ளார். காவிரியில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடுவது தொடர்பாக அம்மாநில முதலமைச்சர் சித்தராமையா கூட்டி இருக்கும் அனைத்து கட்சி கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர்கள் பி.எஸ். எடியூரப்பா, பசுவராஜ் பொம்மை, ஹெச்.டி. குமாரசுவாமி உள்ளிட்டோர் கலந்து கொள்ளவில்லை. முன்னாள் முதலமைச்சர்களான பசுவராஜ் பொம்மை மற்றும் குமாரசுவாமி ஆகியோர் மற்ற பணிகளில் ஈடுபட்டுள்ளதால், கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை என்று தெரிவித்து உள்ளனர். அனைத்து கட்சி கூட்டத்தில் கலந்து கொள்ள காவிரி பகுதி அமைச்சர்கள், அனைத்து கட்சிகளை சேர்ந்த முன்னாள் முதலமைச்சர்கள், மூத்த அமைச்சர்கள், மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக கர்நாடகா மாநிலத்தின் துணை முதலமைச்சர் டி.கே. சிவகுமார் தெரிவித்து இருந்தார்.

## இந்தியா கூட்டணியின் முதல் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் தொடங்கியது




புதுடெல்லி, செப். 14

வரும் பாராளுமன்ற தேர்தலில் பா.ஜ.க.வை எதிர்கொள்வதற்காக 28 எதிர்க்கட்சிகள் இணைந்து 'இந்தியா' கூட்டணியை அமைத்துள்ளனர். இந்தக் கூட்டணியின் முதல் கூட்டம் பாட்னாவிலும், 2வது கூட்டம் பெங்களூருவிலும், 3வது கூட்டம் கடந்த 1ம் தேதி மும்பையிலும் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் காங்கிரஸ், தி.மு.க., ராஷ்டிரீய ஜனதா தளம், ஆம் ஆத்மி உள்பட 28 எதிர்க்கட்சிகள் பங்கேற்றன. இதில் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையை செப்டம்பர் 30ம் தேதிக்குள் இறுதி செய்வது என்பது உள்ளிட்ட பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. மேலும், இந்தியா கூட்டணியில் 14 பேர் கொண்ட ஒருங்கிணைப்பு குழுவும் இறுதி செய்யப்பட்டது. காங்கிரஸ் பொதுச்செயலாளர் வேணுகோபால், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், பாராளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, தேஜஸ்வி யாதவ் உள்ளிட்டோர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். இந்நிலையில், இந்தியா கூட்டணியின் முதல் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் டெல்லியில் உள்ள தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் வீட்டில் தொடங்கியது. இக்கூட்டத்தில் தொகுதி பங்கீடு, கூட்டாக பிரசாரம் செய்வது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசனை நடைபெறலாம் என தெரிகிறது.

## பாராளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரை முன்னிட்டு அனைத்து கட்சி கூட்டம் நடத்த முடிவு

டெல்லி, செப். 14

பாராளுமன்ற சிறப்பு கூட்டத் தொடரை முன்னிட்டு செப்டம்பர் 17ம் தேதி அனைத்து கட்சி கூட்டம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பிரகலாத் சிங் ஜோஷி அழைப்பு விடுத்துள்ளார்.



பாராளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர் வரும் 18ம் தேதி முதல் தொடங்குகிறது. இது 22ம் தேதி வரை என மொத்தம் 5 அமர்வுகள் நடைபெறுகின்றன. "சிறப்பு கூட்டத் தொடரில் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் மற்றும் உரையாடல்களை எதிர்பார்க்கிறேன்," என்று மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி தனது எக்ஸ் (முன்பு டுவிட்டர்) பதிவில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில், பாராளுமன்ற சிறப்பு கூட்டத் தொடரை முன்னிட்டு செப்டம்பர் 17ம் தேதி அனைத்து கட்சி கூட்டம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பிரகலாத் சிங் ஜோஷி அழைப்பு விடுத்துள்ளார். மேலும் அவர், கூட்டத்தில் சிறப்புக் கூட்டத்தொடரை சுமூகமாக நடத்த எதிர்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என அரசு வலிறுத்தும். கூட்டத்தில், சிறப்பு கூட்டத்திற்கான நோக்கம் குறித்து எதிர்க்கட்சிகளுக்கு, மத்திய அரசு விளக்கம் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பா.ஜ.க.வின் திசை திருப்பும் தந்திரத்தை தி.மு.க.வினர் முறியடிக்க வேண்டும்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்




சென்னை, செப். 14

இமாலய ஊழல் முகத்தை மறைப்பதற்காக சனாதனப் போர்வையைப் போர்த்திப் பதுங்கிக் கொள்ளப் பார்க்கிறது பா.ஜ.க. மாநிலங்களின் அதிகாரத்தை பறித்து மாநில மக்களின் உணர்வுகளை அவமதிக்கிற மக்கள் விரோத ஆட்சி ஒன்றியத்தில் நடந்து வருகிறது.

சனாதனம் பற்றிய விமர்சனம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: எந்த ஒரு பிரச்சனையையும் உள் நோக்கத்தோடு திரித்து, ஊடகங்களின் துணையோடு பூதாகரமாக ஆக்கி, நாட்டின் அசலான பிரச்சனைகளை மறக்கடிக்கச் செய்து, மக்கள் கவனத்தைத் திசைதிருப்புவதில் பா.ஜ.க.வினர் வல்லவர்கள் என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். நாட்டில் நடைபெறும் பற்றி எரியும் எந்தப் பிரச்சனைக்கும் வாய் திறக்காத பிரதமர் நரேந்திர மோடி, ஒன்றிய அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி 'சனாதனம் குறித்து தக்க பதில் சொல்லுங்கள்' என்று ஒன்றிய அமைச்சர்கள் அனைவருக்கும் உத்தரவு போடுகிறார் என்றால், அதன் மூலமாக குளிர்காய நினைக்கிறார் என்றே பொருள். சனாதனம் பற்றி ஒன்றிய அமைச்சர்களில்யாராவதுஒருவர்தினந்தோறும் எதையாவது வம்படியாகப் பேசி, அதையே விவாதப் பொருளாக ஆக்கி மக்கள் கவனத்தைத் திசைதிருப்பப் பார்க்கிறார்கள். பா.ஜ.க. ஆட்சியின் தோல்விகளை மறைக்கும் தந்திரத்துக்கு நம்மவர்கள் இடமளித்து விடக்கூடாது. 2014ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடி தேர்தலுக்கு முன்னால் கொடுத்த எந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. நாளும் வெறுப்பரசியலை ஊக்குவித்து, இந்தியத் திருநாட்டின் அமைதிக்கு ஊறு விளைவிக்கிறார்கள். மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்ட பா.ஜ.க. அரசு, அதை மறைக்க விளம்பர ஜாலத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது. அதைத் தான் நாம் அனைவரும் முனைப்பாக பரப்புரை செய்தாக வேண்டும். ரபேல் ஊழலும், அதானி முறைகேடுகளும் உலக சமுதாயத்தின் முன்னால் இந்தியாவைத் தலைகவிழ வைத்துவிட்டன. ★ துவாரகா விரைவுப் பாதைக் கட்டுமானத் திட்டம், ★ அயோத்தியா மேம்பாட்டுத் திட்டம், ★ கிராமப்புற அமைச்சகத்தின் ஓய்வூதியத் திட்டம், ★ எச்.ஏ.எல். விமான வடிவமைப்புத் திட்டம் ஆகிய ஏழு திட்டங்கள் குறித்து சி.ஏ.ஜி. அறிக்கை வெளியாகி இருக்கிறது. இந்த 7 திட்டங்களிலும் முறைகேடு நடந்துள்ளன. விதிமீறல்கள் நடந்துள்ளன. நிதியைக் கையாள்வதில் மோசடிகள் அரங்கேறி உள்ளன என்பதை இந்த அறிக்கை அம்பலப்படுத்தி இருக்கிறது. இதன் மொத்த மதிப்பு 7.50 லட்சம் கோடி ரூபாய் என்று சொல்லப்படுகிறது. இந்த இமாலய ஊழல் முகத்தை மறைப்பதற்காக சனாதனப் போர்வையைப் போர்த்திப் பதுங்கிக் கொள்ளப்பார்க்கிறது பா.ஜ.க. மாநிலங்களின் அதிகாரத்தை பறித்து மாநில மக்களின் உணர்வுகளை அவமதிக்கிற மக்கள் விரோத ஆட்சி ஒன்றியத்தில் நடந்து வருகிறது. எதிர்க்கட்சிகளை அச்சுறுத்துவது, ஆட்சிகளைக் கவிழ்ப்பது, ஒற்றை ஆட்சி என சர்வாதிகாரப் பாதைக்கு நாட்டை அழைத்துச் செல்வது என்பது உள்ளிட்ட ஆபத்தான முயற்சிகளைப் பட்டியலிட்டு மக்களிடம் சொல்ல வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. பா.ஜ.க.வின் ஊழல்மதவாதஎதேச்சாதிகார முகத்தை அம்பலப்படுத்தி, நடக்க இருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் அக்கட்சியைத் தோற்கடிப்பதன் மூலம், நாட்டையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பது என்ற உன்னதமான இலக்கில் வெல்ல அர்ப்பணிப்போடு செயல்படுவோம். எந்த கவனச் சிதறலுக்கும் இடமளித்துவிடக் கூடாது. இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறி உள்ளார்.

# கவர்னர்களின் அரசியல் பேச்சு: அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கண்டனம்



திருப்பூர், செப். 14

பா.ஜனதா ஆட்சி இல்லாத மாநிலங்களில் உள்ள கவர்னர்கள் அரசியல் பேசுவது என்பது அதிகரித்துள்ளது. அரசியல் கட்சி தலைவர்களுக்கும் கருத்துரிமை உள்ளது.

திருப்பூர்தெற்கு மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் திருப்பூரில் உள்ள மாவட்ட கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்றதமிழகசெய்தித்துறைஅமைச்சர்மு.பெ.சாமிநாதன்நிருபர்களிடம் கூறியதாவது: திருப்பூர் தெற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட காங்கயம் அருகே படியூர் தொட்டிப்பாளையத்தில் மேற்கு மண்டல கழகத்தின்வாக்குச்சாவடிநிலைமுகவர்கள் கூட்டம் வருகிற 24ந் தேதி நடைபெற உள்ளது. அந்த பயிற்சி பாசறை கூட்டத்தில் தி.மு.க. தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பங்கேற்று, வாக்குச்சாவடி முகவர்களுக்கு ஆலோசனைகளை வழங்க உள்ளார். காலை 10 மணிக்கு நிகழ்ச்சி தொடங்கி மாலை வரை நடைபெற உள்ளது. 50 சட்டமன்றத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள் பங்கேற்கிறார்கள். 7 வருவாய்மாவட்டத்தில்உள்ளகட்சியின் 14மாவட்டத்தைசேர்ந்தநிர்வாகிகள் பங்கேற்கிறார்கள். பா.ஜனதா ஆட்சி இல்லாத மாநிலங்களில் உள்ள கவர்னர்கள் அரசியல் பேசுவது என்பது அதிகரித்துள்ளது. யார் அதிகம் அரசியல் பேசுவது என்று அவர்களுக்குள் போட்டி நடத்தும் வகையில் கவர்னர்கள் பேசுகிறார்கள். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. நடுநிலையாக இருக்கக்கூடிய கவர்னர்கள் இப்படி இருப்பது கண்டிக்கத்தக்க செயல். ஆ.ராசா சனாதனத்தை எதிர்க்கிறார். அவரோடு விவாதிக்க தயார் என்று கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் கூறியிருப்பது அவர் அரசியலில் ஈடுபடுகிறார் என்பதை காட்டுகிறது. அவர் நிதானம் இழந்து செயல்படுகிறார். அரசியல் கட்சி தலைவர்களுக்கும் கருத்துரிமை உள்ளது. அதை கருத்தால் எதிர் கொள்ளாமல் உருவ பொம்மையை எரிப்பது, தலையை சீவி விடுவேன் என மிரட்டுவதுகண்டனத்துக்குரியது. அதற்கு தகுந்த பாடம் புகட்ட தி.மு.க. ஒரு போதும் அஞ்சாது. பீக் ஹவர் கட்டணம் குறித்து மின்துறை அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# நீண்ட கால விடுமுறை எடுக்கும் கல்லூரி மாணவிகளுக்கு மாத உதவித்தொகையை நிறுத்த உத்தரவு

திருப்பூர், செப். 14

அரசு பள்ளிகளில் 6 முதல் பிளஸ் 2 வரை படித்து உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கு தமிழக அரசு சார்பில் மாதந்தோறும் 1000 ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. சமூகநலத்துறை, பள்ளிக்கல்வித்துறை, உயர்கல்வித் துறை சார்பில் இதற்கான செயல்பாடுகள் மேற்கொள்ள ப்படுகின்றன. முதலாமாண்டில் சேர்ந்துள்ள மாணவிகளின் விபரங்கள், இணையதளத்தில் உள்ளீடு செய்யும் பணிகள் நடந்து வருகிறது.

இந்நிலையில் 90 நாட்கள் கல்லூரிக்கு வராத மாணவர்கள்நீண்டகால விடுமுறையில் இருப்பதாக கருதப் படுவர். இம்மாணவிகளுக்கு உதவித்தொகை உடனடியாக நிறுத்தப்படும். இடைநின்றவர்கள், மாற்றுச்சான்றிதழ் பெற்றவர்கள் பட்டியலை தொகுத்து ஆண்டுக்கு இருமுறை அனுப்ப அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இம்மாணவிகளுக்கு உதவித் தொகைஉடனடியாகநிறுத்தப்படும் என கல்லூரி கல்வி இயக்குனரகம் தெரிவித்துள்ளது.

# பருவமழை கால நோய்களை தடுக்க சுகாதார துறையை தயார் நிலையில் வைத்திருக்க உத்தரவு

திருப்பூர், செப். 14

தொற்று நோய்கள் மற்றும் பூச்சிகளால் ஏற்படும் நோய்களை தடுக்க உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையை பொது சுகாதாரத்துறை தற்போதே தொடங்கி உள்ளது. நடமாடும் மருத்துவக்குழு மூலம் கண்காணிப்பது உள்ளிட்ட செயல்பாடுகளில் ஈடுபட தயாராக இருக்க வேண்டும்.

வடகிழக்கு பருவமழை விரைவில் தொடங்குகிறது. தொற்று நோய்கள் மற்றும் பூச்சிகளால் ஏற்படும் நோய்களை தடுக்க உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையை பொது சுகாதாரத்துறை தற்போதே தொடங்கி உள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவில், சுகாதார கட்டமைப்பை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் தடையில்லா மின்வசதியை உறுதி செய்ய வேண்டும். மழைநீர், கழிவுநீர்கட்டமைப்பு சீராக இருப்பதை ஆய்வு நடத்தி உறுதி செய்ய வேண்டும். மருத்துவமனை வளாகம், காத்திருப்பு அறை, ஆம்புலன்ஸ் வாகனங்கள் உள்ளிட்டவற்றை கிருமிநாசினி கொண்டு தூய்மைப்படுத்த வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வினியோகத்தின் தரத்தை உறுதி செய்வதுடன், குடிநீரில் போதிய அளவு குளோரின் கலக்கப்பட்டு மக்களுக்கு வினியோகிக்கப்படுகிறதா என்பதையும் கட்டாயம் ஆராய வேண்டும். சுகாதார மாவட்டம், வட்டாரங்கள் வாரியாக விரைவு சிகிச்சை குழு, கொசுக்கள் மற்றும் பூச்சிகளால் பரவும் நோய்களை கட்டுப்படுத்துவதற்கான சிறப்பு குழுக்கள் 24 மணி நேரமும் தயாராக இருக்க வேண்டும். பருவமழைக்கு பின் ஏற்படும் காய்ச்சல், வயிற்றுப்போக்கு, மஞ்சள் காமாலை மற்றும் நோய் தொற்று குறித்த விபரங்களை முன்கூட்டியே அறிந்து, காய்ச்சல் பாதிப்பு அதிகமுள்ள இடங்களில் உடனடியாக மருத்துவ முகாம் நடத்த வேண்டும். நடமாடும் மருத்துவக்குழு மூலம் கண்காணிப்பது உள்ளிட்ட செயல்பாடுகளில் ஈடுபட தயாராக இருக்க வேண்டுமென பல்வேறு வழிகாட்டுதல் சுகாதாரத்துறை துணை இயக்குனர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# அ.தி.மு.க.சார்பாக வாக்குசாவடி முகவர்கள் கூட்டம்



கிருஷ்ணகிரி, செப். 14

கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் கே.அசோக் குமார் தலைமை வகித்தார். வேப்பனஹள்ளி எம்.எல்.ஏ,வுமான கே.பி. முனுசாமி கலந்துக் கொண்டு ஆலோசனை வழங்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கெலமங்கலம் கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட கொப்பகரை ஊராட்சி, மேடஅக்ரகாரம் ஊராட்சி, தொட்ட மெட்டரை ஊராட்சி லிங்கணம்பட்டி ஆகிய பகுதிகளில் ஊராட்சிகள் வாரியாக வாக்குச்சாவடி முகவர்கள் ஆய்வுக்கூட்டம் நடந்தது. கூட்டத்தில் மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினருமமான கே.அசோக் குமார் தலைமையில் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகன் முன்னிலை வகித்தார். ஆய்வுக் கூட்டத்தில் அ.தி.மு.க. துணை பொதுசெயலாளரும் வேப்பனஹள்ளி எம்.எல்.ஏ,வுமான கே.பி. முனுசாமி கலந்துக் கொண்டு வாக்குசாவடி பூத் வாரியாக பட்டியில் உடன் தேர்தல் பொருப்பாளர்களை நேடியாக ஆய்வு செய்து ஆலோசனை வழங்கினார். நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன், மாவட்ட கவுன்சிலர் விமலா சண்முகம், முன்னாள் மாவட்ட விவசாய அணி துணை செயலாளர் ராஜகோபால், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் அப்பையன் முனிசாமி, கூட்டுறவு சங்கத் தலைவர் சுப்பிரமணி, ஒன்றிய அவைத்தலைவர் மாரிமுத்து, துணை செயலாளர் முனுசாமி, கூட்டுறவு சங்க இயக்குனர் சீனிவாசன், முன்னால் ஊராட்சி செயலாளர் பெருமாள் பால்னாம்பட்டி ராஜா, கட்சி நிர்வாகிகள் பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் கலந்துக் கொண்டனர்.

# மண் கடத்திய வாகனங்கள் பறிமுதல்



உடுமலை, செப். 14

பொக்லைன் எந்திரம் மற்றும் 2 டிராக்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டது. வருவாய்த்துறையினரின் இந்த நடவடிக்கைக்கு சமூக ஆர்வலர்கள் பாராட்டு தெரிவித்து உள்ளனர்.

உடுமலையை அடுத்த அமராவதி பகுதியில் அனுமதி இல்லாமல் சட்ட விரோதமாக கிராவல் மண் எடுத்ததாக கூறப்படுகிறது. இது குறித்த தகவல் உடுமலை ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் விரைந்து சென்ற ஆர்.டி.ஓ. ஜஸ்வந்த் கண்ணன் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அனுமதி இல்லாமல் மண் எடுத்துக் கொண்டிருந்தது உறுதி செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து பொக்லைன் எந்திரம் மற்றும் 2 டிராக்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

பின்னர் அவை வருவாய் துறையினரால் அமராவதி போலீசில் ஒப்படைக்கப்பட்டது. இது குறித்து கிராம நிர்வாக அலுவலர் போலீசில் புகார் அளித்தார். அதன் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள். வருவாய்த்துறையினரின் இந்த நடவடிக்கைக்கு சமூக ஆர்வலர்கள் பாராட்டு தெரிவித்து உள்ளனர்.

# சிவாடி ஊராட்சியில் குடிநீர் குழாய்களை உடைத்தவர் மீது நடவடிக்கை எடுக்க கோரி மனு

தொப்பூர், செப். 14

200 மீட்டர் நீளத்திற்கு பைப் லைன்களை அமைத்து வீடுகளுக்கு குடிநீர்வழங்கப்பட்டு வருகிறது. தொப்பூர் காவல் நிலையத்தில் ஊராட்சி மன்ற தலைவர் அறுமுகம் புகார் மனுவினை அளித்துள்ளார்.

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்தில் சிவாடி ஊராட்சி அமைந் துள்ளது. இந்த ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவராக ஆறுமுகம் உள்ளார். சிவாடி ஊராட்சியில் பொது குடிநீர் தேவையை தீர்க்கும் பொருட்டு 15வது நிதி குழு மானியத்தின் மூலம் சுமார் 200 மீட்டர் நீளத்திற்கு பைப் லைன்களை அமைத்து அங்குள்ள வீடுகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சம்பவத்தன்று தனிநபர் ஒருவர் திடீரென புதிதாக அமைக்கப்பட்ட குடிநீர் குழாய்கள் அனைத்தையும் உடைத் துள்ளதாக கூறப்படுகிறது. அப்பொழுது அதை தட்டி கேட்ட பொது மக்களையும் அந்த நபர் மிரட்டியதாகவும் கூறப்பட்ட நிலையில் ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம் தொப்பூர்காவல் நிலையத்தில் புகார் மனு அளித் துள்ளார். அந்த மனுவில் இப்பகுதியில் முழுமையாக குடிநீர் தட்டுப்பட்டை நீக்கும் பொருட்டு பைப் லைன்கள் அமைக்கப்பட்டு குடிநீர் சீராக வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது அனைத்து பைப் லைன்களும் உடைக்கப்பட்டு உள்ளதால் பொது மக்களுக்கு தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் குடிநீர் குழாயினை சேதப்படுத்திய நபர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொப்பூர் காவல் நிலையத்தில் ஊராட்சி மன்ற தலைவர் புகார் மனுவினை அளித்துள்ளார்.

# போலீசார் என்று கூறி தொழிலாளர்களிடம் பணம், செல்போன் பறித்த 3 பேர் கைது



பல்லடம், செப். 14

தொழிலாளர்களிடம் இருந்து ரூ. 15 ஆயிரம் மற்றும் செல்போன் ஆகியவற்றை பறித்தனர். கைதான 3 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

பல்லடத்தை அடுத்த கரைப்புதூரில் பனியன் நிறுவனம் நடத்தி வருபவர் தங்கராஜ். இவரது நிறுவனத்திற்குள் நேற்று முன்தினம் இரவு 3 ஆசாமிகள் நுழைந்தனர். அவர்கள் "நாங்கள் போலீஸ்காரர்கள் என்றும், கஞ்சா உள்ளதா? என சோதனை செய்ய வந்திருப்பதாக கூறி தொழிலாளர்களை மிரட்டினர். மது போதையில் இருந்த அந்த ஆசாமிகள், தொழிலாளர்களின் அறைக்குள் நுழைந்து தொழிலாளர்களிடம் இருந்து ரூ. 15 ஆயிரம் மற்றும் செல்போன் ஆகியவற்றை பறித்தனர். இதனால் அவர்கள் மீது சந்தேகம் அடைந்த தங்கராஜ் பல்லடம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். உடனே போலீசார் அங்கு விரைந்து வந்து 3 பேரையும் பிடித்து விசாரணைக்கு போலீஸ் நிலையம் அழைத்து சென்றனர். அங்கு அவர்களிடம் விசாரணை செய்தபோது அவர்கள் பல்லடம் கரைப்புதூர் அண்ணா நகரை சேர்ந்த ரமேஷ் மகன் பாண்டியன் (வயது 22), சேடபாளையத்தை சேர்ந்த சண்முகம் மகன் கமலக்கண்ணன் (22) மற்றும் கரைப்புதூரை சேர்ந்த குப்புசாமி மகன் குரு (27) என தெரியவந்தது. இவர்கள் 3 பேரும் போலீஸ் என்று கூறி வடமாநில தொழிலாளிகளிடம் பணம் மற்றும் செல்போனை பறித்தது தெரியவந்தது. இதையடுத்து அவர்கள் 3 பேரையும் கைது செய்த போலீசார் அவர்களிடம் இருந்த செல்போன் மற்றும் இருசக்கர வாகனம் ஆகியவற்றை பறிமுதல் செய்தனர். இதில் பாண்டியன் என்பவர் மீது ஏற்கனவே கஞ்சா வழக்கு உள்ளதாக தெரிவித்தனர். கைதான 3 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

# தஞ்சை ரெயில் நிலையத்தில் நடைபெற்று வரும் மேம்பாட்டு பணிகள் ஆய்வு



தஞ்சாவூர், செப். 14

முதல்கட்டமாகரூ.616 கோடியில் மேம்படுத்தப்பட உள்ளது. தஞ்சாவூர் ரெயில் நிலையம் முழுவதும் மேற்கூரை அமைக்கப்படும்.

இந்தியா முழுவதும் முதல் கட்டமாக 508 ரெயில் நிலையங்கள் அம்ரித் பாரத் நிலையம் திட்டத்தின் கீழ் ரூ.24 ஆயிரத்து 470 கோடியில் மேம்படுத்தப்படுகிறது. இதில் தெற்கு ரெயில்வே நிலையங்களில் உள்ள 25 ரெயில் நிலையங்களும் அடங்கும். அதன்படி, தமிழகத்தில் முதல்கட்டமாக தஞ்சாவூர், மயிலாடுதுறை, செங்கல்பட்டு, உள்ளிட்ட 18 ரெயில் நிலையங்கள், புதுச்சேரி ரெயில் நிலையம், கர்நாடகா மாநிலத்தில் மங்களூரு உள்ளிட்ட பல்வேறு ரெயில் நிலையங்கள் முதல் கட்டமாக ரூ.616 கோடியில் மேம்படுத்தப்பட உள்ளது. இந்நிலையில், இந்த ரெயில் நிலையங்கள் நவீன முறையில் மேம்படுத்தும் திட்ட பணிகளை எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் எம்.பி., மாவட்ட கலெக்டர் தீபக் ஜேக்கப் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். பின்னர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம் எம்.பி., கூறியதாவது: தஞ்சாவூர் ரெயில் நிலையம் முழுவதும் மேற்கூரை அமைக்கப்படும். லிப்ட் மட்டும் எக்ஸ்லேட்டர் வசதி 5 நடைமுறைக்கு செல்ல கூடிய அளவில் புணரமைக்கப்படும். நடைமேடைகள் புதுப்பிக்கப்படும். போக்குவரத்து நெரிசலை போக்கும் வகையில் ரெயில் நிலையத்தின் வெளிப்புறம் சாலை புதிதாக அமைக்கப்படும் என்றார். ஆய்வின் போது கோட்டாட்சியர் இலக்கியா, ரெயில்வே அதிகாரிகள், நெடுஞ்சாலை துறை அதிகாரிகள், தாசில்தார் உள்ளிட்ட உடன் இருந்தனர்.

# பல்லடம் அருகே கரடிவாவி ஊராட்சியில் இலவச ஆம்புலன்ஸ் சேவை தொடக்கம்




பல்லடம், செப். 14

தன்னார்வலர்கள் உதவியுடன் ரூ.8 லட்சம் மதிப்பில் ஆம்புலன்ஸ் வாகனம் வாங்கப்பட்டுள்ளது. மருத்துவமனைக்கு பல்லடம், திருப்பூர், கோவை பகுதிக்கு செல்வோரிடம் குறைந்த கட்டணம் வசூலிக்கப்படும்.

பல்லடம் வட்டாரம் கரடிவாவி ஊராட்சியில் வசிக்கும் பொதுமக்களுக்கு 10 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பல்லடம், அல்லது சூலூர் பகுதிகளில் இருந்து தான் ஆம்புலன்ஸ் வாகனம் வந்து சேர வேண்டும். இதனால் அவசர மருத்துவ சிகிச்சைக்கு பொது மக்கள் கடும் சிரமப்பட்டு வந்தனர். இதனை போக்கும் வகையில் ஊராட்சி மன்றத் தலைவர் ரஞ்சிதா பகவதி கிருஷ்ணன் ஏற்பாட்டின் பேரில் தன்னார்வலர்கள் உதவியுடன் ரூ.8 லட்சம் மதிப்பிலான ஆம்புலன்ஸ் வாகனம் வாங்கப்பட்டுள்ளது. இது குறித்து கரடிவாவி ஊராட்சி மன்ற தலைவர் ரஞ்சிதா பகவதி கிருஷ்ணன் கூறியதாவது: கரடிவாவி ஊராட்சிபகுதியில் பொது மக்கள் அவசர மருத்துவ சிகிச்சைக்கு செல்வதற்கு பல்லடம், அல்லது சூலூர் பகுதிகளில் இருந்து தான் ஆம்புலன்ஸ் வாகனம் வந்து சேர வேண்டும். இதனால் உரிய நேரத்தில் மருத்துவமனைக்கு செல்லமுடியாமல் பொது மக்கள் அவதிப்பட்டு வந்தனர். மக்கள் சிரமத்தை போக்குவதற்காக தன்னார்வலர்கள் உதவியுடன் ரூ.8 லட்சம் மதிப்பில் ஆம்புலன்ஸ்வாகனம் வாங்கப்பட்டுள்ளது. ஆம்புலன்ஸ் வாகனத்தின் உதவியுடன் கரடிவாவி மற்றும் அருகே உள்ள ஊராட்சிகளில் வசிக்கும் மக்களுக்கு ஆம்புலன்ஸ் சேவை அளிக்கப்படும். சாலை விபத்தில் காயம் அடைபவர்கள் மற்றும் பிரசவத்திற்கு மருத்துவமனைக்கு செல்வோருக்கு எந்தவிதமான கட்டணமும் வசூலிக்கப்படமாட்டாது. அதே சமயம் கரடிவாவியில் இருந்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைக்கு பல்லடம், திருப்பூர், கோவை பகுதிக்கு செல்வோரிடம் தூரத்திற்கு ஏற்ப குறைந்த கட்டணம் வசூலிக்கப்படும். இது லாபம் நோக்கம் இல்லாத முற்றிலும் மக்கள் சேவை பணியாகும். இதனை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். 9171080108 என்ற செல்போன் எண்ணிற்கு 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம். விரைவில் அமரர் ஊர்தி சேவை தொடங்கப்படவுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# அபராதம் ரத்தால் மகிழ்ச்சி நிலுவை மின் கட்டணத்தை செலுத்துவதில் விசைத்தறியாளர்கள் ஆர்வம்

திருப்பூர், செப். 14

முதல், 1000யூனிட்டுக்கு மின் கட்டணம் இல்லை. உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தில் 50 சதவீதத்தை குறைத்து அரசு அறிவித்தது. 6 தவணைகளில் நிலுவை கட்டணத்தை செலுத்தவும் அரசு அனுமதி அளித்தது.

கோவை, திருப்பூர் மாவட்டத்தில் விசைத்தறி தொழில் பிரதானமாக உள்ளது. பல லட்சம் பேர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். கடந்தாண்டு செப்டம்பர் மாதம் விசைத்தறிக்கான மின் கட்டணம் உயர்த்தப்பட்டது. இதனால் மின் கட்டணத்தை செலுத்தாமல் விசைத்தறியாளர்கள் போராடினர். அதன் பலனாக முதல், 1000 யூனிட்டுக்கு மின் கட்டணம் இல்லை. உயர்த்தப்பட்ட மின் கட்டணத்தில் 50 சதவீதத்தை குறைத்து அரசு அறிவித்தது. ஆனால் நிலுவையில் உள்ள மின் கட்டணத்துக்கு அபராதம் மற்றும் வட்டி விதிக்கப்பட்டது.

மேலும் உயர்த்தப்பட்ட மின் கட்டணத்திலேயே மின் கணக்கீடு செய்யப்பட்டது. இதனால் விசைத்தறியாளர்கள் ஏமாற்றமடைந்தனர். கடந்த 8 மாதங்களாக முதல்அமைச்சர், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.,க்கள், மற்றும் மின்வாரிய அதிகாரிகளிடம் நிலுவை மின் கட்டணத்துக்கு அபராதம், வட்டியை ரத்து செய்ய வேண்டும், கட்டணம் செலுத்த தவணை அளிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வந்தனர்.

விசைத்தறியாளர்களின் கோரிக்கையை ஏற்று, அபராதம் மற்றும் வட்டியை ரத்து செய்தும், 6 தவணைகளில் நிலுவை கட்டணத்தை செலுத்தவும் அரசு அனுமதி அளித்தது. இதனால் மகிழ்ச்சி அடைந்த விசைத்தறியாளர்கள் நிலுவை மின் கட்டணத்தை செலுத்துவதில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இதுகுறித்து, கோவை, திருப்பூர்மாவட்டகூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர் சங்க தலைவர் குமாரசாமி, பொருளாளர் பூபதி ஆகியோர் கூறுகையில், அரசின்அறிவிப்பால்மகிழ்ச்சி அடைந்துள்ளோம். கடந்த 4 நாட்களாக மின் வாரிய அலுவலகங்களுக்கு சென்றுதங்களின்நிலுவை கட்டணம் குறித்து விசாரித்து அதை செலுத்துவதில் விசைத்தறியாளர்கள் தீவிரம் காட்டி வருகின்றனர் என்றனர்.

# சதுர்த்தியை முன்னிட்டு விநாயகர் சிலைகள் வாங்க பொதுமக்கள் ஆர்வம்



தாராபுரம், செப். 14

ஒரு அடி முதல் பல அடி உயரம் வரை விநாயகர் சிலைகளை வைத்து வழிபட்டு அதனை நீர்நிலைகளில் கரைத்து விழாவினை நிறைவு செய்வர். சிறியவர் முதல் பெரியவர்கள் வரை விரும்பி வாங்கி செல்கின்றனர்.

விநாயகர் சதுர்த்தி அன்று இந்து அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் பொது இடங்களில் ஒரு அடி முதல் பல அடி உயரம் வரை விநாயகர் சிலைகளை வைத்து வழிபட்டு அதனை நீர்நிலைகளில் கரைத்து விழாவினை நிறைவு செய்வர். இந்த வருடம் விநாயகர் சதுர்த்தி வருகிற 18ந்தேதி அன்று வருகிறது. அதையொட்டி தாராபுரம், உடுமலை பகுதியில் மண்பாண்ட கலைஞர்கள் விநாயகர் சிலை தயாரிப்பில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து தாராபுரம் உடுமலை ரோடு பகுதியை சேர்ந்த மண்பாண்ட கலைஞர் கிருஷ்ணகுமார் கூறியதாவது: விநாயகர் சதுர்த்தியை இந்து அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் விமரிசையாக கொண்டாடுவர்.

அன்றைய தினம் முக்கிய இடங்களில் விநாயகர் சிலைகளை வைத்து வழிபாடு செய்வார்கள். அதில் காவல் விநாயகர், மோட்டார் வாகன விநாயகர் என பல உருவங்களில் விநாயகர் சிலை வைத்து வழிபாடு நடத்துவர். அன்று விநாயகருக்குபிடித்தமான கொளுக்கட்டை, அவல், பொறி மற்றும் இனிப்புகள் படையல் வைத்து பூஜைகள் நடைபெறும். சில இடங்களில் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். பின்னர் அடுத்த நாள் அல்லது 3 நாட்கள் வைத்து பூஜைகள் செய்யப்பட்டு அந்த சிலைகள் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு அருகில் உள்ள நீர்நிலைகளில் கரைக்கப்படும். இதற்கான விநாயகர் சிலைகள் தற்போது தயாரித்து வருகிறோம். அந்த சிலைகள் அரை அடிமுதல் 3 அடி உயரம் வரை உள்ளதாக தயார் செய்து உள்ளோம். அவற்றிற்கு கண்ணை கவரும் வண்ணங்கள் கொடுத்து விற்பனைக்கு வைத்துள்ளோம். விநாயகர்சதுர்த்திக்கு ஒருவாரமே இருக்கும் நிலையில் அதனை சிறியவர் முதல் பெரியவர்கள் வரை விரும்பி வாங்கி செல்கின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# அவினாசியில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருப்பூர், செப். 14

திருப்பூர் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 15ந் தேதி காலை 11 மணிக்கு அவினாசி தாசில்தார் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. கூட்டத்துக்கு சப்கலெக்டர் ஸ்ருதன் ஜெய் நாராயணன் தலைமை தாங்குகிறார். இதில் விவசாயிகள் பங்கேற்று பயன்பெறலாம். தாலுகா அளவில் கூட்டம் நடத்த திட்டமிடப்பட்டு கடந்த கூட்டம் பல்லடம் தாசில்தார் அலுவலகத்தில் நடந்தது. இந்த முறை அவினாசி தாசில்தார் அலுவலகத்தில் நடக்கிறது. அனைத்து விவசாயிகளும் இந்த கூட்டத்தில் பங்கேற்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# பி.ஏ.பி., வாய்க்காலில் தண்ணீர் திருடினால் மின் இணைப்பு துண்டிப்பு: அதிகாரி எச்சரிக்கை

திருப்பூர், செப். 14

திருமூர்த்தி அணையில் இருந்து நான்காம் மண்டல பாசனத்துக்கு வருகிற 20ந் தேதி தண்ணீர் திறக்கப்படவுள்ளது. தொகுப்பு அணைகளில் நீர் இருப்பு குறைவாக உள்ளதால் ஒரு சுற்று உயிர் நீர் மட்டுமே திறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பாசனத்துக்காக திறக்கப்படும் தண்ணீரை மோட்டரை பயன்படுத்தி திருடுவது தெரியவந்தால் மின்சாரம் துண்டிக்கப்படும் என்று நீர்வளத் துறை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். இது குறித்து பல்லடம் நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் எஸ். ஆனந்த் பாலதண்டபாணி கூறியதாவது: பல்லடம் பகுதியில் 48 கிலோ மீட்டர் தொலைவுக்கு பிஏபி., பாசன வாய்க்கால் உள்ளது. அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் கடைமடை வரை தடையின்றி செல்வதற்காக வாய்க்கால்கள் சீரமைக்கப்பட்டு ள்ளன. வாய்க்காலில் திறக்கப்படும் தண்ணீர் கடை மடை பகுதிகளான வெள்ளக்கோவில், குண்டடம் வரை முறையாக செல்வதையும், தண்ணீர் திருட்டையும் அந்தந்தப் பகுதி பாசன சபைத் தலைவர்கள் கண்காணிக்க வேண்டும். வாய்க்காலில் திறக்கப்படும் தண்ணீரைத் திருடுவது தெரியவந்தால் மின் சாரம் துண்டிக்கப்படும். மேலும் தண்ணீர் திருட்டில் ஈடுபடுபவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும். தண்ணீர் திருட்டை கண்காணிக்கும் வகையில் காவல் துறை, வருவாய் துறை, நீர்வளத் துறை மற்றும் மின்சாரத் துறை அலுவலர்கள் அடங்கிய குழு அமைக்கப்படும் என்றார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# தடுப்பூசி போட்டதால் 3 மாத குழந்தை இறக்கவில்லை சுகாதாரத்துறை அதிகாரி விளக்கம்

கடலூர், செப். 14

குழந்தை தஸ்விக் ராஜுக்குதடுப்பூசிபோடப்பட்டதால் உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டு இறந்ததாக உறவினர்கள் குற்றம் சாட்டினர். கடலூர் ஜி.எச் மருத்துவமனையில்உடல் கூறு ஆய்வுக்காக குழந்தையின் சடலம் வைக்கப்பட்டுள்ளது.




கடலூர் மாவட்டம் பண்ருட்டி அடுத்த ஏ.கே. பாளையத்தை சேர்ந்தவர் கிருஷ்ணராஜ். விவசாயியான இவருக்கும் அழகியநத்தத்தை சேர்ந்த காந்தி பிரியாவிற்கும் திருமணமாகி தஸ்விக் ராஜ் என்ற 3 மாத ஆண் குழந்தை இருந்தது. காந்தி பிரியா தனது தாய் வீடான அழகியநத்தத்தில் தனது குழந்தையுடன் தங்கி இருந்தார். நேற்று கலையூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் குழந்தை தஸ்விக்ராஜுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. பின்னர் காந்தி பிரியா தனது குழந்தை தஸ்விக்ராஜை வீட்டுக்கு கொண்டு வந்தார். நேற்று இரவு திடீரென்று குழந்தைக்கு வயிறு உப்பியது. இதனால் அதிர்ச்சியடைந்த காந்திபிரியா தனது உறவினர்களுடன் குழந்தை தஸ்விக்ராஜை சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். ஆனால் அங்கு பரிசோதனை செய்த டாக்டர் ஏற்கனவே குழந்தை தஷ்விக் ராஜ் இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதனால் அதிர்ச்சி அடைந்த குழந்தையின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் கதறி அழுது துடித்தனர். நேற்று காலை ஆரம்ப சுகாதாரநிலையத்தில்குழந்தை தஸ்விக் ராஜுக்கு தடுப்பூசி போடப்பட்டதால் உடல் நிலை பாதிப்பு ஏற்பட்டு இறந்ததாக உறவினர்கள் குற்றம் சாட்டினர். இதுகுறித்து தூக்கணாம்பாக்கம் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் குழந்தைக்கு தடுப்பூசி போடப்பட்டதால் உடல் நிலை பாதிக்கப்பட்டு இறந்ததா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தினர். சுகாதாரத்துறை அதிகாரிகளும் விசாரணை மேற்கொண்டனர். இந்நிலையில், 3 மாத குழந்தை தஸ்விக் ராஜாவின் பெற்றோர் குற்றச்சாட்டுக்கு சுகாதாரத்துறை விளக்கம் அளித்துள்ளது. இதுகுறித்து சுகாதாரத் துறை அதிகாரி கூறுகையில், " கடலூர்மாவட்டம்,பண்ருட்டி அருகே ஆரம்ப சுகாதார நிலையத்தில் தடுப்பூசி போட்டதால் 3 மாத குழந்தை இறக்கவில்லை. கலையூர்அரசு ஆரம்பசுகாதார நிலையத்தில் நேற்று குழந்தைக்கு 2ம் கட்ட தடுப்பூசி போடப்பட்டது. வீட்டிற்கு சென்ற குழந்தைக்கு இரவு வயிற்று வலி ஏற்பட்டுள்ளது.

அதற்கு இயற்கை மருந்து கொடுத்துள்ளனர். அதன்பிறகுதான் குழந்தை இறந்துள்ளது. இந்த குழந்தையுடன் 6 குழந்தைகளுக்கு ஒரே தடுப்பூசியில் இருந்து மருந்து செலுத்தப்பட்டது. அனைத்து குழந்தைகளும் நலமுடன் இருக்கிறார்கள். இந்தகுழந்தையும் தடுப்பூசி போடப்பட்டு அரை மணி நேரம் கவனிப்பில் வைக்கப்பட்டு நலமுடன் இருப்பதை அறிந்த பிறகே வீட்டிற்கு அனுப்பி வைத்தோம். அதனால், குழந்தைதடுப்பூசி குறைப்பாடால் இறக்கவில்லை. குழந்தையின் இறப்புக்கான காரணம் குறித்து கண்டறிய கடலூர் ஜி.எச் மருத்துவமனையில் உடல் கூறு ஆய்வுக்காக வைக்கப்பட்டுள்ளது. அதன் பிறகே உண்மையான காரணம் தெரியவரும்" என்றார்.

# புளிஞ்சூர் சோதனை சாவடியை முற்றுகையிட்ட கர்நாடக விவசாயிகள் கைது

ஈரோடு, செப். 14

போராட்டத்தில் ஈடுபட்ட கர்நாடகா மாநில விவசாயிகள் சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். சாம்ராஜ்நகர் போலீசார் மறியலில் ஈடுபட்ட 38க்கும் மேற்பட்ட விவசாயிகளை கைது செய்தனர்.

தமிழக நெற்களஞ்சியமான தஞ்சை உள்ளிட்ட காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் காவிரி நீரை நம்பியே சாகுபடி செய்து வருகிறார்கள். நடப்பு ஆண்டில் கடந்த ஜூன் 12 ம் தேதி டெல்டா சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஆனால் நடுவர் மன்ற தீர்ப்பின்படி தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய நீரை கர்நாடகா வழங்கவில்லை. இதனால் காவிரி டெல்டா பகுதியில் சாகுபடி செய்திருந்த பயிர்கள் கருகின. கடன் வாங்கி சாகுபடி செய்த பயிர்கள் சேதம் அடைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்தனர். இதனை அடுத்து காவிரியில் தமிழகத்துக்கு உரிய நீரைதிறந்து விடுமாறு பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதினார். மேலும் காவிரி ஆணைய கூட்டத்திலும் தமிழக நீர் வளத்துறை அதிகாரிகள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தினர். காவிரி ஆணைய உத்தரவின்படி கர்நாடகாஅரசுகாவிரியில் தண்ணீர் திறந்து விட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கர்நாடகாவில் அரசியல் கட்சிகள், விவசாய சங்கத்தினர் போராட்டத்தில் குதித்தனர். இந்நிலையில் இன்று காவிரியில் தமிழகத்திற்கு நீர் திறக்க கூடாது என்பதை வலியுறுத்தி கர்நாடக மாநிலம் சாம்ராஜ் நகர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாய சங்க தலைவர் பாக்யராஜ் தலைமையில் 38க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஈரோடு மாவட்டம் தாவாடி அருகே உள்ள தமிழக கர்நாடக எல்லையான புளிஞ்சூர் சோதனை சாவடியை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் தங்களுக்கு குடிப்பதற்கு தண்ணீர் இல்லாத நிலையில் தமிழகத்திற்கு எப்படி தண்ணீர் திறந்து விட முடியும் என்று கூறி கோஷங்கள் எழுப்பினர். பின்னர் திடீரென போராட்டத்தில் ஈடுபட்ட கர்நாடகா மாநில விவசாயிகள் சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து சாம்ராஜ்நகர் போலீசார் மறியலில் ஈடுபட்ட 38க்கும் மேற்பட்ட விவசாயிகளை கைது செய்தனர். விவசாயிகளின் மறியல் போராட்டத்தால் தமிழக கர்நாடகா இடையே போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. வாகனங்கள் இரண்டு புறங்களிலும் நீண்ட வரிசையில் அணிவகுத்து நின்றன. ஒரு மணி நேரத்துக்கு பிறகு போக்குவரத்து சீரானது.



# குமரகோட்டம் முருகன் கோவிலில் 3 ஜோடிகளுக்கு இலவச திருமணம்: 29 வகை சீர்வரிசையும் வழங்கப்பட்டது

காஞ்சிபுரம், செப். 14

இந்து சமய அறநிலைய துறையின் சார்பில் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. ரூ.75 ஆயிரம் மதிப்பிலான கட்டில், பீரோ, மெத்தை உள்ளிட்ட சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டது.



இந்து சமய அறநிலைய துறை சார்பில் கோவில்களில் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் இலவச திருமணங்கள் நடத்தி வைக்கப்படுகிறது. அதன்படி காஞ்சிபுரம் மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் திருமணம் செய்து கொள்ளும் மணமக்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு குடும்ப சூழ்நிலை குறித்து ஆய்வு செய்து தேர்வு செய்யப்பட்ட 3 ஜோடிகளுக்கு குமரக் கோட்டம் முருகன் கோவிலில் இந்து சமய அறநிலைய துறையின் சார்பில் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. பட்டுச் சேலை, பட்டு வேட்டி, கைக்கடிகாரம், தங்கத் தாலி, உள்ளிட்டவைகள் வழங்கி காஞ்சிபுரம் எம்.எல்.ஏ. .எழிலரசன், மாநகராட்சி மேயர் மகாலட்சுமி யுவராஜ்,இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் வான்மதி ஆகியோர் திருமணத்தை நடத்தி வைத்தனர். பின்னர் திருமணம் செய்து கொண்ட 3 ஜோடிகளுக்கும் தலா ரூ.75 ஆயிரம் மதிப்பிலான கட்டில், பீரோ, மெத்தைஉள்ளிட்ட 29 வகையான சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டது. இதில் துணை ஆணையர் லட்சுமி காந்தன் பாரதி, அறங்காவலர் குழு உறுப்பினர் செல்வி, திருக்கோவில் செயல் அலுவலர் தியாகராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# புதியதாக கட்டப்பட்ட பயணிகள் நிழற்குடை விஜய் வசந்த் எம்.பி. திறந்து வைத்தார்

குமரி, செப். 14

பயணிகள் நிழற்குடை அமைக்க பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கி செய்யப்பட்டது. மாநில பொதுக்குழு உறுப்பினர் ரத்தின குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மேலும் படிக்க கன்னியாகுமரி: பொன்மனை சந்திப்பில் பயணிகள் நிழற்குடை அமைக்க பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கி செய்யப்பட்டது. அதன்படி கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் கலந்து கொண்டு புதியதாக கட்டப்பட்ட பயணிகள் நிழற்குடையை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் காங்கிரஸ் வட்டார தலைவர் வினுட் ராய், பொன்மனை பேரூராட்சி தலைவர் அகஸ்டின், மாநில பொதுக்குழு உறுப்பினர் ரத்தின குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# நெமிலி சார் பதிவாளர் அலுவலகத்தில் மரக்கன்றுகள் நடும் விழா

காவேரிப்பாக்கம், செப். 14

ராணிப்பேட்டை மாவட்ட பதிவுத்துறை சார்பில் கருணாநிதி நூற்றாண்டு விழாவையொட்டி நெமிலி சார் பதிவாளர் அலுவலகத்தில் மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது. மாவட்ட பதிவாளர் வாணி தலைமை வகித்தார். சார்பதிவாளர்கள் செந்தில்ரமணன், உதயன் முன்னிலை வகித்தனர். நெமிலி பேரூராட்சி தலைவர் ரேணுகா தேவி சரவணன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளர்களாக கலெக்டர் வளர்மதி, நெமிலி ஒன்றிய குழு தலைவர் வடிவேலு ஆகியோர் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டனர். விழாவில் நெமிலி ஒன்றிய குழு துணை தலைவர் தீனதயாளன், நெமிலி பேரூர் திமுக செயலாளர் ஜனார்த்தனன், பேரூராட்சி துணைத் தலைவர் சந்திரசேகர், ஒன்றிய கவுன்சிலர் சங்கீதாக திரவன், மாவட்ட இளை ஞரணி துணை அமைப்பாளர் முரளி, நெமிலி இன்ஸ்பெக்டர் லட்சுமிபதி, சப் இன்ஸ்பெக்டர் சிரஞ்சீவிலு மற்றும் சார் பதிவாளர் அலுவலக அதிகாரிகள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



# திருப்பதி திருக்குடை ஊர்வலம் தமிழிசை சவுந்தரராஜன் துவக்கி வைத்தார்

அம்பத்தூர், செப். 14

ஊர்வலத்துக்கு மாநில விஷ்வ இந்து பரிஷத் தலைவர் ஆண்டாள் சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். எஸ். சீனிவாசன் உட்பட திருக்குடை சேவா சமிதி டிரஸ்ட் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அயனாவரம் திருக்குடை சேவா சமிதி அறக்கட்டளையும் தமிழ்நாடு விசுவ இந்து பரிஷத்தும் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதம் திருமலை திருப்பதியில் நடைபெறும் பிரம்மோற்சவம் ஊர்வலத்தில் 21 அழகிய திருக்குடைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்று சமர்ப்பிப்பது வழக்கம். அதேபோல் இந்த ஆண்டும் திருமலை திருப்பதியில் நடைபெறும் பிரம்மோற்சவத்தில் சிறப்பு பூஜைகளுடன் 21 திருக்குடைகள் ஊர்வலமாக எடுத்து சென்று சமர்ப்பிக்கப்படுகிறது. அதற்காகதிருக்குடை ஊர்வலம் இன்று காலை பூக்கடையில் உள்ள சென்ன கேசவ பெருமாள் கோவிலில் இருந்துசிறப்பு பூஜை புனஸ்காரங்களுடன் கோவிந்தா கோவிந்தா கோவிந்தா என்று பக்தர்களின்கரகோஷத்துடன் ஊர்வலமாக புறப்பட்டது. ஊர்வலத்துக்கு மாநில விஷ்வ இந்து பரிஷத் தலைவர் ஆண்டாள் சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். திருக்குடை சேவா சமிதி அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் ஜி. ராமலிங்கம் வரவேற்றார். விஷ்வ ஹிந்து பரிஷத் அகில பாரத வழக்கறிஞர் பிரிவு சு.சீனிவாசன் முன்னிலை வகித்தார். திருக்குடை ஊர்வலத்தைஅகில பாரத சன்னியாசிகள் சங்க அறங்காவலர் சுவாமி ஈஸ்வரானந்தா ஆசியுரையுடன் தெலுங்கானா மற்றும் புதுச்சேரி மாநில கவர்னர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் தொடங்கி வைத்தார். திருக்குடை சேவா சமிதி டிரஸ்ட் அறங்காவலர்கள் தணிகைவேல், எஸ். சீனிவாசன் உட்பட திருக்குடை சேவா சமிதி டிரஸ்ட் மாநில, மாவட்ட நிர்வாகிகள்கலந்துகொண்டனர். இந்த திருக்குடை ஊர்வலமானது என்.எஸ்.சி.போஸ் ரோடு, வால்டாக்ஸ் ரோடு, சூளை நெடுஞ்சாலை, அவதான பாப்பையா ரோடு, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, ஸ்டாரன்ஸ் ரோடு, கொன்னூர் நெடுஞ்சாலை ஆகிய பகுதிகளில் பக்தர்கள் புடை சூழ ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு இன்று இரவு அயனாவரத்தில் உள்ளகாசிவிசுவநாதர் ஆலயம் சிவசக்தி சத்சங் மண்டபத்தில் தங்குகிறது.

# கூடலூரில் தூய்மைப்பணியாளர்கள் போராட்டம்

ஊட்டி, செப். 14

10 தி.மு.க. கவுன்சிலர்களையும் தூய்மைப் பணியாளர்களை முற்றுகையிட்டு வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். நகராட்சித் தலைவர் பரிமளா கூறியதையடுத்து தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.



நீலகிரி மாவட்டம் கூடலூர் நகராட்சியின் அவசரக் கூட்டம், தலைவர் பரிமளா தலைமையில், துணைத்தலைவர் சிவராஜ், நகராட்சி ஆணையர் பிரான்சிஸ்சேவியர் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கூடலூர் நகராட்சிக்கு உள்பட்ட 21 வார்டுகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை அகற்ற ஒப்பந்தம் விடுவது குறித்து விவாதிக்கப்பட்டு, அங்கு ஏற்கனவே பணிகளை மேற்கொண்டு வரும் நிறுவனத்துக்கு ஒப்புதல் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது தி.மு.க கவுன்சிலர் ராஜேந்திரன் பேசுகையில், பல்வேறு புகார்கள் உள்ள நிறுவ னத்துக்கு மீண்டும் ஒப்பந்தம் வழங்குவது முறையற்றது. ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொண்ட 3 நிறுவனங்களில் ஒரு அமைப்பு, ஒப்பந்தப்புள்ளியில்20சதவீதம்தொகையை குறைத்து அளித்து உள்ளது. அந்த நிறுவனத்துக்கு வழங்கினால்நகராட்சிக்கு செலவு குறையும். தற்போது உள்ள நிறுவனத்துக்கு ஒப்பந்தம் கொடுப்பது ஏற்புடையதல்ல என்றார். அதற்கு பெரும்பாலான கவுன்சிலர்கள் ஆதரவு தெரிவித்தனர். மேலும் ஒப்பந்தப்புள்ளி எடுத்து உள்ள நிறுவனம் ஏற்கனவே அரசு நிர்ண யித்தபடி தூய்மைப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கவில்லை என்று கூறி பலகட்ட போராட்டங்களை நடத்தியதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.இதற்கிடையேதி.மு.க கவுன்சிலர் இளங்கோவன் தலைமையில் 10 கவுன்சிலர்கள், தற்போது குப்பைகளை அகற்றும் நிறுவனத்துக்கே ஒப்பந்தம் வழங்க ஆதரவு கடிதம் வழங்கினர். ஆனால் ஆதரவுக் கடிதம் வழங்குவது நடைமுறையில் இல்லை என்று ஒரு தரப்பினர் கூறியதால் கூட்டத்தில் வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து, தீர்மானம் நிறைவேற்றாமல் மன்றக் கூட்டம் நிறைவடைந்தது. கூட்டத்தில் இருந்து வெளியே வந்த ஆதரவுக் கடிதம்கொடுத்த10தி.மு.க. கவுன்சிலர்களையும் தூய்மைப் பணியாளர்களைமுற்றுகையிட்டு வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். அப்போது ஒரு சில பெண் கவுன்சிலர்கள் நகராட்சித் தலைவரின் வாகனத்தில் ஏறிசெல்ல முயன்றனர்.

அவர்களையும்தூய்மைப் பணியாளர்கள் மறித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஒப்பந்தம் வழங்குவது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றவில்லை என நகராட்சித் தலைவர் பரிமளா கூறியதையடுத்து தூய்மைப் பணியாளர்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

# திருவேற்காடு பகுதியில் கழிவு நீர் தொட்டியை சுத்தம் செய்ய ஆட்களை பயன்படுத்தினால் நடவடிக்கை நகராட்சி ஆணையர் எச்சரிக்கை

பூந்தமல்லி, செப். 14

நகராட்சி வாகனம் அல்லது நகராட்சியில் உரிமம் பெற்ற வாகனங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். மீறினால் இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது ரூ.2 லட்சம் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.




திருவேற்காடு நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கழிவுநீர்தொட்டியை சுத்தம் செய்வதற்கு மனிதர்களை பயன்படுத்தினால் இரண்டு ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும் என்று நகராட்சி நிர்வாகம் சார்பில் எச்சரிக்கைவிடுக்கப்பட்டு உள்ளது. இது குறித்து நகராட்சி ஆணையர் ஜஹாங்கீர் பாஷா கூறியதாவது: திருவேற்காடு நகராட்சி பகுதியில் வீடுகள், வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகளில் கழிவுநீர் தொட்டிகளை சுத்தம் செய்வதற்கு நகராட்சி வாகனம் அல்லது நகராட்சியில் உரிமம் பெற்ற வாகனங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும். இந்த சேவையை பெற 14420 என்ற கட்டணமில்லா தொலைபேசி உதவி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். மனிதக் கழிவுகளை அகற்றும் தொழில்புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வு சட்டத்தின் படி, எக்காரணம் கொண்டும்நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மனிதர்களை கழிவு நீர் தொட்டியை சுத்தம் செய்வதற்கு பயன்படுத்தக் கூடாது. இதனை மீறினால் இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது ரூ.2 லட்சம் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும். 2வது முறையும் தவறு செய்தால் 5 ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது ரூ.5 லட்சம் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும் கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்யும் போது உயிரிழப்பு ஏற்பட்டால் தொழிலாளியின் குடும்பத்திற்கு தொடர்புடைய உரிமையாளர் ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் இவ்வாறு அவர் கூறினார்.

# 100 நாள் வேலைக்கு செல்லாமல் போராட்டத்தில் பங்கேற்ற பெண்கள்

விருதுநகர், செப். 14

நாடு முழுவதும் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்கு வேலை அளிக்கும் விதமாக மத்திய அரசு மகாத்மா காந்தி ஊரக திட்டத்தின் கீழ் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தை கொண்டு வந்தது. இதன் மூலம் கிராமப்புற பெண்கள் வேலை வாய்ப்பு பெற்று பயனடைந்து வந்தனர். இதன் மூலம் கிராமங்களில் உள்ள நீர்நிலைகள், சாலைகள்மேம்படுத்துதல், வாய்க்கால்கள் சீரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் நடந்தன. விருதுநகர் மாவட்டத்திலும் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது.

இந்தநிலையில் நேற்று சாத்தூர் அருகே 100 நாள் வேலைக்கு செல்வோர் காங்கிரஸ் கட்சி சார்பில் நடந்த போராட்டத்தில் பங்கேற்றது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அதன் விபரம் வருமாறு: சாத்தூர்ஏழாயிரம் பண்ணை ரோட்டில் உள்ள ஒத்தையால் கிராமத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்கிழிக்கப்பட்டது. இதை கண்டித்து சாத்தூர் வட்டார துணை தலைவர் முத்துவேல் தலைமையில் நேற்று மறியல் போராட்டம் நடந்தது. இதில் கட்சியினரும், அந்த பகுதியில் 100 நாள் வேலைக்கு செல்வோரும் கலந்து கொண்டனர். இது தொடர்பாக சாத்தூர் தாலுகா போலீசார் வழக்குப்பதிவு செய்து வருகின்றனர்.


மாவட்டத்தில் 100 நாள் வேலை திட்டத்தில் பல்வேறு திட்டப்பணிகள் நடைபெற்று வரும் நிலையில் அதற்கு செல்லா மல் போராட்டத்தில் பங்கேற்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து உயரதிகாரிகள் விசாரணை நடத்த வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

## சந்திரமுகி 2 படத்தின் அடுத்த பாடல் எப்போது தெரியுமா? படக்குழு அறிவிப்பு

இயக்குனர் பி.வாசு இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகி இருக்கும் திரைப்படம் 'சந்திரமுகி 2'. இப்படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடித்துள்ளார். கங்கனா ரனாவத் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடித்திருக்கின்றனர். லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு எம்.எம் கீரவாணி இசையமைத்துள்ளார். 'சந்திரமுகி 2' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் செப்டம்பர் 28ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இந்நிலையில், இப்படத்தின் அடுத்த பாடல் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, 'சந்திரமுகி 2' திரைப்ப டத்தில் இடம்பெற்றுள்ள 'தோரி போரி' பாடலின் லிரிக் வீடியோ இன்று மாலை 5 மணிக்கு வெளியாகும் என படக்குழு வீடியோ ஒன்றை பகிர்ந்து அறிவித்துள்ளது.






## ரிலீஸ் தேதியை தள்ளி வைத்த சலார் படக்குழு.. ரசிகர்கள் கவலை

இயக்குனர் பிரசாந்த் நீல் இயக்கத்தில் உருவாகி வரும் திரைப்படம் 'சலார்'. இப்படம் வருகிற 28ஆம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டது.

கே.ஜி.எப். திரைப்படத்தின் பிரம்மாண்ட வெற்றியை தொடர்ந்து, இயக்குனர் பிரசாந்த் நீல் அடுத்ததாக 'சலார்' திரைப்படத்தை இயக்கி வருகிறார். இந்த படத்தில் 'பாகுபலி' திரைப்படத்தில் நடித்திருந்த பிரபாஸ் கதாநாயகனாக நடிக்கிறார். கே.ஜி.எப். திரைப்படத்தை தயாரித்த ஹோம்பாலே பிலிம்ஸ் 'சலார்' படத்தையும் தயாரிக்கிறது. இந்த படத்தில் வரதராஜ மன்னார் என்ற கதாபாத்திரத்தில் நடிகர் பிரித்விராஜ் நடிக்கிறார். இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை பெருமளவில் ஈர்த்தது. 'சலார்' திரைப்படம் வருகிற 28ம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்ட நிலையில், இப்படத்தின் ரிலீஸ் தேதியை படக்குழு தள்ளி வைத்துள்ளது. சலார் போஸ்டர் அதாவது, எதிர்பாராத சில காரணங்களுக்காக படத்தின் ரிலீஸ் தேதி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் புதிய ரிலீஸ் தேதி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பால் ரசிகர்கள் கவலையில் உள்ளனர்.





## விஜய் ஆண்டனியுடன் இணைந்த தெருக்குரல் அறிவு



விஜய் ஆண்டனி நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'ரத்தம்'. இப்படம் அக்டோபர் 6ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இயக்குனர் சி.எஸ்.அமுதன் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'ரத்தம்'.இந்த படத்தில் விஜய் ஆண்டனி, மகிமா நம்பியார், ரம்யா நம்பீசன், நந்திதா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப்படத்தின் டிரைலர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இப்படம் வருகிற 28ஆம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்த நிலையில் ரிலீஸ்தேதிமாற்றப்பட்டுஅக்டோபர் 6ஆம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டது.ரத்தம்போஸ்டர் இந்நிலையில், 'ரத்தம்' படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தில் இடம்பெற்றுள்ள 'ஒரு நாள்' பாடல் நாளை மாலை 5 மணிக்கு வெளியாகும் என படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது. இந்த பாடலை தெருக்குரல் அறிவு எழுதி, பாடியும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நடிகை கீர்த்தி பாண்டியனை மணந்த அசோக் செல்வன் கோலாகலமாக நடைபெற்ற திருமணம்

'சூது கவ்வும்' படத்தில் அறிமுகமாகிய அசோக் செல்வன், 'ஓ மை கடவுளே', 'நித்தம் ஒரு வானம்' உட்பட பல்வேறு படங்களில் நடித்துள்ளார். அண்மையில் இவர் நடித்து வெளியான 'போர்தொழில்' திரைப்படம் பெரும் வரவேற்பைப் பெற்றது.

'தும்பா', 'அன்பிற்கினியாள்' படங்களில் நாயகியாக நடித்தவரும், நடிகர் அருண்பாண்டியனின் மகளுமான கீர்த்தி பாண்டியனும் அசோக் செல்வனும் கடந்த சில வருடங்களாக காதலித்து வந்தனர். இவர்களின் காதலுக்கு இரு வீட்டிலும் சம்மதம் தெரிவித்ததை அடுத்து கடந்த சில மாதங்களுக்கு முன் திருமண நிச்சயதார்த்தம்நடந்தது.

இதில் நெருங்கிய சொந்தங்கள் மட்டுமே கலந்துகொண்டனர்.

இந்நிலையில், இவர்களின் திருமணம் பாளையங்கோட்டை அருகே உள்ள இட்டேரியில் நடந்து முடிந்துள்ளது. இதில் நெருங்கிய நண்பர்கள் மற்றும் உறவினர்களும் கலந்து கொண்டனர். திருமண வரவேற்பு நிகழ்ச்சி சென்னையில் பிரமாண்டமாக நடைபெற இருக்கிறது.



## மார்க்ரம் அதிரடி சதம்: 3வது ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலியாவை வென்றது தென் ஆப்பிரிக்கா

முதலில் ஆடிய தென் ஆப்பிரிக்கா 338 ரன்கள் குவித்தது. தென் ஆப்பிரிக்கா 111 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தென் ஆப்பிரிக்கா சென்றுள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்று விளையாடி வருகிறது. முதல் இரு போட்டிகளில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றிருந்தது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 3வது ஒருநாள் போட்டி இன்று நடைபெற்றது. டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பந்துவீச்சை தேர்வுசெய்தது.

அதன்படி, முதலில் ஆடிய தென் ஆப்பிரிக்கா ஆரம்பம் முதலே ரன்களை குவித்தது. இதனால் அந்த அணி 50 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 338 ரன்கள் குவித்தது. மார்கரம் அதிரடியாக ஆடி சதமடித்து அசத்தினார். மார்க்ரம் 102 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். டி காக் 82 ரன்னும், பவுமா 57 ரன்னும் எடுத்தனர். இதையடுத்து, 339 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆஸ்திரேலிய அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் டேவிட் வார்னர் மட்டும் அரை சதமடித்து 78 ரன்னில் அவுட்டானார்.

டிராவிஸ் ஹெட் 38 ரன்னும், மிட்செல் மார்ஷ் 29 ரன்னும் எடுத்தனர். இறுதியில் ஆஸ்திரேலிய அணி 34.3 ஓவரில் 227 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம் தென் ஆப்பிரிக்க அணி 111 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 21 என்ற கணக்கில் ஆஸ்திரேலிய அணி முன்னிலை வகிக்கிறது. தென் ஆப்பிரிக்க சார்பில் ஜெரால்டு கொயட்சி 4 விக்கெட்டும், சம்ஷி, மகராஜ் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினர். ஆட்ட நாயகன் விருது மார்க்ரமுக்கு வழங்கப்பட்டது.





## இது வெறும் hug அல்ல... அனைத்து ரசிகர்களின் எமோஷன்.. வைரலாகும் கோலி ரோகித்தின் வீடியோ

இலங்கை 73 ரன்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து திணறியது. இலங்கை அணியின் கேப்டன் சனாகா வந்த முதலே அதிரடியாக விளையாடினார்.

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் இந்தியா இலங்கை அணிகள் மோதின.

இதில் முதலில் பேட்டிங் செய்த இந்தியா 213 ரன்னில் ஆல் அவுட் ஆனது. இதனையடுத்து ஆடிய இலங்கை 73 ரன்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து திணறியது. இந்நிலையில் அடுத்து வந்த கேப்டன் சனாகா வந்த முதலே அதிரடியாக விளையாடினார். ரவீந்திர ஜடேஜா வீசிய 26வது ஓவரின் முதல் பந்திலேயே ரோகித் சர்மாவிடம் கேட்ச் கொடுத்து அவுட் ஆனார். அப்போது இந்திய வீரர்கள் அதை கொண்டாட துவங்கிய நிலையில் விராட் கோலி ஓடிவந்து ரோகித் சர்மாவை கட்டிப்பிடித்து கொண்டாடியது ரசிகர்களை திரும்பிப் பார்க்க வைத்தது. குறிப்பாக கேப்டன்ஷிப் விவாகரத்தில் இருவருக்கும் சண்டை விரிசல் என கடந்த காலங்களில் பலமுறை ஊடகங்களில் செய்தி வந்த நிலையில் அதை அவர்கள் தொடர்ந்து மறுத்து வந்தனர். அதை மேலும் மறுக்கும் வகையில் இந்த தருணம் அமைந்தது என்றே சொல்லலாம்.

இந்திய பேட்டிங் துறையின் இரு துருவங்களாகவும் முன்னாள் இந்நாள் கேப்டன்களாகவும் திகழும் விராட் கோலி மற்றும் ரோகித் சர்மா ஆகியோர் மிகவும் அன்பாக கட்டுப்படுத்தி வெற்றியை கொண்டாடிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## ஜோதிடம் பார்த்து வீரர்கள் தேர்வு: ஜோதிடருக்கு 15 லட்சம் சன்மானம் இந்திய கால்பந்து அணியில் அதிர்ச்சி சம்பவம்

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் சில முக்கியமான வீரர்கள் அணியில் இடம்பெறவில்லை. ஜோதிடர் சொன்னபடி ஆப்கானிஸ்தானுக்கு எதிரான அந்த ஆட்டத்தில் இந்திய அணி 21 என்ற கணக்கில் வெற்றி பெற்றதாம்.

கடந்த ஆண்டு நடைபெற்ற ஆசிய கோப்பை கால்பந்து தகுதிச்சுற்றில் இந்திய வீரர்களின் திறமையை பரிசீலிக்காமல், ஜோதிடரை அணுகி வீரர்களின் ராசி பலன்களை பார்த்து தேர்வு செய்தது தற்போது வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த ஆண்டு ஆசிய கோப்பை தகுதிச்சுற்றில் இந்திய அணி விளையாடிய போது இந்திய கால்பந்து சங்கத்தின் அதிகாரி ஒருவரின் மூலம் ஜோதிடரை, அணியின் பயிற்சியாளர் இகோர் ஸ்டிமாக் அணுகியிருக்கிறார். அந்த தகுதிச்சுற்றின் ஒவ்வொரு ஆட்டத்துக்கு முன்பாகவும் எந்தெந்த வீரர்களை அணியில் எடுக்கலாம், எந்தெந்த வீரர்கள் எப்படி ஆடுவார்கள் என அணியின் விவரங்கள் அத்தனையையும் ஜோதிடரிடம் கொடுத்தே இகோர் ஸ்டிமாக் ஆலோசனை பெற்றிருக்கிறார். கடந்த ஆண்டு ஜூன் 11ம் தேதி நடைபெற்ற ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் பங்கேற்கும் இந்திய அணியின் பிளேயிங்11 பட்டியலை 2 நாள்களுக்கு முன்னதாகவே ஜோதிடருக்கு பயிற்சியாளர் அனுப்பியுள்ளார். ஒவ்வொரு வீரரின் நட்சத்திரத்தை ஆராய்ந்து , இவர் இன்று நன்றாக விளையாடுவார். இவரை அணியில் சேர்க்க வேண்டாம் என்று பயிற்சியாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். அந்த ஆட்டத்தில் சில முக்கியமான வீரர்கள் அணியில் இடம்பெறவில்லை. ஏனென்றால் அன்றைய தினம் அவர்களது நட்சத்திரங்கள் சாதகமாக இல்லை என்று ஜோதிடர் கூறியது தான் காரணம். மேலும் ஜோதிடர் சொன்னபடி ஆப்கானிஸ்தானுக்கு எதிரான அந்த ஆட்டத்தில் இந்திய அணி 21 என்ற கணக்கில் வெற்றி பெற்றதாம். மேலும், இந்திய அணிக்காக ஆலோசனை வழங்கியதற்காக அந்த ஜோதிடருக்கு ரூ. 15 லட்சம் சன்மானமும் வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த விசயம் தற்போது வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.



Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.